REGD. No. M 4042

# திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10 | 11—5—52 | இதழ் 45

மழலேபேசியும், குறு நகை புரிந்
ம், கூச்சலிட்டும், சிறுகை நீட்டி
தத்தித் தவழ்கின்றனவே,
ந்தைச் செல்வங்கள், அதைக்
த்து, கவிஞர் ஒருவர் குறிப்
டிருக்கிறார்—அழகாக. தோட்
து மலர்களாம், அவர்கள்!
டிலே குழந்தைகள்; தோட்டத்
ல மலர்கள்’ அழகான உவமை!
ஞ்சை அள்ளும் உவமை!! குழந்
களை மலர்களுக்கு ஒப்பிட்டிருக்
ர். உண்மைதானே. வேதனை
விம்முதலும் நிரம்பிய எத்த
யோ குடும்பங்களில், துன்பத்
கும் தொல்லேக்கும் ‘இடை
ளை’ தருவோராக யிருப்பது
ந்தைச் செல்வங்கள்தானே?
தியான மனநிலையுற்றேன், பூந்
ட்டம் புகுந்தால், துயரம்
றயத்தான் செய்யும். அதே
ல, வீடு — பூந்தோட்டமாகு
ம், குழந்தைகள் உலவினால். கூறு
ர், கவிஞர். கவிதைகளும் நூல்
ம், குழந்தைகளைப்பற்றி, ஏரா
உள்ளன. எதிர்கால உலகமா
றழைப்பர், ‘எதிர்காலம்’
றே சுருங்கச்சொல்லி அதில்
க்கிக்கிடக்கும் பொருள் காட்டி
ழ்வோரும் உண்டு. இவ்வளவு
பித்துக் கூறப்படும் குழந்தைச்
ல்வங்களின் நிலே, என்ன,
ம? இங்குதான், யோசித்துப்
ங்கள். என்ன நிலே! பட்டு
த்தையிலே பலவித ‘சொக்காய்’
ம் பவுன் ஆபரணங்களும்
ட்டவண்ணம், தாலாட்டப்படு
த, அந்தக் குழந்தைகள்
கையை அல்ல — சிந்திக்கச்
ல்வது. சீரும்சிறப்புடன் இருக்
இந்தக் குழந்தைச் செல்வங்

களின் தொகை பெரிதல்ல; மிகமிகக் கொஞ்சம். ஆனல்! தொட்டிலும் தாலாட்டும் அறியாது, மரக்கிளைகளிலே கட்டப்பட்ட ‘ஏணை’யே தொட்டிலாக, மர நிழலே ‘வீடாக’ புழுதி மேடுகளே விளையாட்டு மைதானங்களாக, உடம்பிலே துணியின்றி உலவியும் தவழ்ந்தும் கிடக்கின்றனவே குழந்தைகள்—ஏழைகளின் வீட்டிலே பிறந்தவைகள், அவைகளைப்பற்றி எண்ணிப் பாருங்கள்.

குழந்தைப் பருவம் — உலகக் கோரம் எதையும் அறியாத பருவம். சூழ்ச்சியும், சூதும் நிறைந்த இந்த

## ‘தோட்டத்து மலர்கள்’
## சுகம் பெறுவது என்று?

உலகத்திலே, எதுவும் தெரியாத இன்பப் பருவம் அது.

என்றாலும், இன்றைய சமுதாய அமைப்பில், ‘எதிர்கால உலகம்’ என்று போற்றியழைக்கப்படும் அந்தக் குழந்தையர் உலகு, எவ்விதம் இருக்கிறது?

இது குறித்து, ரஷ்யச் செய்தி இலாகாவினர் தகவல் ஒன்று தந்திருக்கிறார்கள்: அகில உலக குழந்தை பாதுகாப்பு மாநாட்டினர் விடுத்துள்ள செய்தியாகும் அது. அந்தக் குறிப்பினைத் தருகிறோம்:

“கோடிக்கணக்கான குழந்தைச் செல்வங்கள், இன்று, பசிக்கும் ஏழ்மைக்கும் இரையாகி வருகின்றன. ஆயிரக்கணக்கான குழந்தைகளை, ஜப்பான் சிரியாபோன்றநாடுகளில், பெற்றோர்கள் விலைகூறி விற்கிறார்கள். பற்பல நாடுகளில், சின்னஞ்சிறு பாலர்கள், உழைக்கிறார்கள்—தம் குடும்பத்தைக் காக்க. ‘குழந்தைகளை வேலைக்கு வைத்து கொடுமைப்படுத்துதல் கூடாது’ என்கிற சட்டங்கள் பல இருந்தும், இச் செயல், பகிரங்கமாக நடைபெறுகிறது. செல்வச் சீமான்கள் வீட்டிலேயிருக்கும் சிங்காரப் பொருள்களுக்காக, குழந்தைகளின் உழைப்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது ஈரான் போன்ற நாடுகளில். சிறுபாலர்கள்! சிதைகிறார்கள்!! செல்வங்கொழிக்கும் நாடுகள் அவர்கள் பிறந்த இடங்கள். எனினும், இந்தக் குழந்தைகள், சீரழிகிறார்கள். ஏராளமான செல்வத்துக்கு அதிபதியாகயிருக்கும் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும், ஆசிய நாடுகளிலும் கோடிக்கணக்கான குழந்தைகள் குப்பி கழுவவும் வழியின்றி துடிக்கிறார்கள்—இருக்க இடமின்றித் தவிக்கிறார்கள் — கவலைப்பட யாருமின்றி அலைகிறார்கள். இரண்டு மூன்று வயதுக்குள்ளேயே இந்த ‘ஏழையின் சின்னங்கள்’, தம்மைக்காத்துக் கொள்ளவேண்டியவர்களாகிறார்கள். குபேர நாடு என்று முரசு கொட்டப்படுகிறதே அமெரிக்கா, அங்கும்—அதன் பக்கத் துணையாக இருக்கும் பேற்கத்திய நாடுகளிலும், குழந்தைகள் நிலே என்ன தெரியுமா? நான்கு குடும்பத்துக்கு ஒரு குடும்பத்தில் வேதனைக்காளாகும் குழந்தைகள் இருக்கின்றன, அமெரிக்காவில். பிரான்சிலும் பிரிட்டனிலும், குழந்

டுக் கொண்டே போகிறது. இதாலி யில், 40-லட்சம் குழந்தைகள் நிர்க்கதி. 'இந்த நாடுகளை செல்வமில்லாதவையா? சீரோடு வாழமுடியாதவைகளா? இல்லை, இல்லை! எனினும், இந்த 'எதிர்காலங்கள்' தத்தளிப்பதேன்— தவிப்பதேன்?

கிரீஸிலும் ஸ்பெயினிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சிறையிலும் கொட்டடிகளிலும் அடைக்கப்பட்டிருக்கின்றனர். கொரியாவிலும், இந்தோசீனாவிலும், மலேயாவிலும் குழந்தைகள் படும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. கொரியாவிலும் சீனாவிலும் அமெரிக்கத் துருப்புகள் கிருமிகளைக் கொட்டுகிறார்கள்—இந்தக் கோரத்தின் விளைகளும் விபரீதங்களும்—அப்பப்ப!''

இவ்விதம், பற்பல நாடுகளிலுள்ள நிலையை, படம் பிடித்திருக்கிறது. இந்த நாடுகளிலெல்லாம், ஆட்சி புரிவோர் கவனம் செல்லாத காரணத்தால், இத்தகைய கேடுகள் மலிந்து கிடக்கின்றன. இந்த நாடுகளின்பட்டியலில், 'பாரதமாதா'வின் பூமியையும் ஒப்பிடுங்கள். சுதந்திர நாடாம், இது! அமெரிக்காவுக்கோ அல்லது அந்நியநாடுகளுக்கோ அடிபணியாது—எதிர்காலச்சந்ததிகளை அடிமையாக்கவுமாட்டோம் எனமுழக்கமிடுகிறார் நேரு — ஆனால் என்ன நடக்கிறது? ரஷ்ய செய்தி இலாகா தந்துள்ள செய்திகளைவிட கோரமான காட்சிகள், நமது வீதிகளிலே. 'பிள்ளையோபிள்ளை!'—என்று பெற்ற குழந்தையை விலை கூறுகிறாள், மாதா. பசிக்கொடுமையால், குழந்தைகளைவெட்டி வீசுகிறான், தந்தை. குழந்தை மலர்களாம்! ஆனால் மூறித்து வீசப்படுகிறது!—ஏழ்மையால்.

இங்கே வாழும் குழந்தைகளின் நிலையை எண்ணினால், பரிதாபம் அதிகமாகும். படிக்க வசதி கிடையாது! மாடு மேய்த்தால், காட்டுக்குச்சென்று 'சுள்ளி' ஒடித்துக் கொடுத்தால், சாணம் எடுத்தால், 'ஆண்டை' சொற்படி கேட்டால், 'ஆபீஸ் சிறுவனாக' இருந்தால், கொத்தனாருக்கு 'எடுபிடி'யாக இருந்தால், குப்பை எடுத்தால், —இவைகளிலே ஏதாவதுஒன்றைச் செய்தால்தான் வாழமுடியும் என்கிற நிலைமையில் இருக்கிறார்கள் 'நமது எதிர்கால உலகங்கள்.' கல்வி கிடையாது! கோழிதான் விளையாட்டுத்தோழன் — குப்பைமேடுதான் கூடாரம். தவறி, ஆசையின் விளைவால், ஏதாவது, 'எசமான்' வீட்டிலிருப்பதைத் தொட்டுவிட்டாலோ சிறைவாசம்!—வளராத வயது, வாடுகின்ற பாலர்கள் அநேகம் கிறுவயது குற்றவாளிகள் — என்று பட்டம் சூட்டுகிறது சர்க்கார். குழந்தைகள் மலர்களாம்! ஆனால் இங்கே என்ன காண்கிறோம்?

உலகின் பலபாகங்களிலும், குழந்தைகள் வாழ்வு, கோரமாக இருப்பதற்குக்காரணம் அந்தந்த நாடுகளிலே உள்ள சர்க்கார்கள், முதலாளித்துவ சர்க்காராகயிருப்பதுதான் என்று சூசகமாக எடுத்துச் சொல்கிறது, ரஷ்யச் செய்தி இலாகா.

இங்கும், இதுதானே காரணமாகும்? ஏழைகள் சர்க்கார் என்று பெருமிதத்தோடு பேசுகின்றனரே, காங்கிரஸ் நண்பர்கள் — ஏழைக்குழந்தைகளின் கதி எப்படியிருக்கிறது, இங்கு? மற்றநாடுகளைவிட படுமோசமாகவன்றோ வளர்ந்து கொண்டுள்ளது.

என்ன காரணம் இதற்கு? குழந்தைகள் பிறந்த பூமி—பாலைவனமா. அல்லவே! செழிப்பும் கொழிப்பும் நிறைந்ததாயிற்றே. இருந்தும் ஏன் இந்நிலை? கல்வியும் அறிவும் பரவாத காரணம்தான் என்ன. மேட்டுக்குடியினரின் குழந்தைகள் உல்லாசமாகப் பள்ளிக்குச் செல்லுவதைப் பார்த்து நிற்கும் கதிதானே ஏழைக் குழந்தைகளுக்கு, இங்கு? பார்த்து நிற்பது மட்டுமல்ல, மாடிவீட்டுக் குழந்தையைப் பள்ளிகூடம்வரை அழைத்துச் சென்று, அவர்தம் புத்தக மூட்டையைத் தலையிலே வைத்துக்கொண்டு, பாதுகாப்புக்காக செல்லும் கதிதானே?

குழந்தைகளின் பாதுகாவலன் சர்க்கார் என்று சொல்கிறார்கள்— தான் பெற்ற குழந்தையை ஒரு தாய் கொன்றாள் என்றால், 'எப்படிக் கொன்றாய்?' என்று அதட்டிக் கேட்கிறது அரசாங்கம். சர்க்காரின் குடிமகனைக் கொல்லலாமா?' என்று சட்டம் கொட்டுகிறது. ஆனால் அதே குழந்தைக்கு ஆதரவு தா! படிப்பு வசதி தா? வாழச் செய்ய?

அண்மையில், சென்னை மாகான சர்க்கார் தலைவரான அன்பர் ஆச்

சாரியார் உத்திரவு ஒன்று பிறப்பி
துள்ளாராம். சர்க்கார் உத்யோக
தர்களின் குழந்தைகளுக்கு, கல்
வசதி. கிடைப்பது சம்பந்தமா
இலவசக் கல்வி தரப்படுமாம்
உத்யோகஸ்தரின் குழந்தைகளுக்
ஆறுவது பாராட்டவை! கூடாதென
கூறவில்லை, நாம். ஆனால் இந்
சலுகை, சர்க்கார் உத்யோகஸ்
களின், குழந்தைகளோடுமட்டும்
நின்றுவிடவேண்டும். சர்க்கார் உ
த்யோகஸ்தர்களை 'தாஜா'செய்ய
இவ்வுத்தரவு என்ன அவசியமே
பட்டது அன்பர் ஆச்சாரியாருக்
அதிகாரிகளின் அன்பைப்பெற?
'சூதுமதி' எனக்கூற விரும்பவில்
நாம். உள்நோக்கம் என்ன, இதற்
தமக்குச் சாதகமாக அவர்கள் எ
லாரும் இருக்கவேண்டுமென்ப
தானே! தனது லாபம் என்
உதவிபுரிய எண்ணம் வருகிறது
அவர்களுக்குமட்டும் சலுகைத
வந்தவரின் கண்களின் ஏன்ப
வில்லை, குப்பைமேட்டிலே கோ
ணாண்டிகளாய் நிற்கும்குழந்தைக


குழந்தைகளை மலர் என்றார் க
ஞர்—ஆனால் அந்த 'மலர்கள்'
தச் சமுதாயத்திலே எவ்வி
கிடக்கின்றன. பெற்றோரின் பெ
மூச்சுக்கும் ஊராரின் ஏச்சுப் பே
சுக்கும், சர்க்காரின் சட்டத்துக்
வதைபடுகின்றன. மலர்கள் மி
கப்படுகின்றன. எதிர்கால உல
வதைக்கப்படுகின்றது.

இக்கொடுமைகள் நீடிக்கச்செ
அனுமதிக்கிறது, அரசாங்கம்.
டாயக் கல்வியில்லை! அறிவுபர
வழியுமில்லை!! ஏழ்மையின் கொ
தலும் நீங்கவில்லை. இந்தக்கொடு
கள் நீங்கினால்தானே 'எதிர் கால
சீர்பெற முடியும்.

ரஷ்யச் செய்தி இலாகா செ
தருகிறது — குழந்தைகள் 'ம
களாக' உலவுவதைக் காட்டும் ப
களைப் பிரசுரித்து. இங்கே? செ
மும் பெருமையும் நிறைந்தத
கூறப்படும் இங்கே எதைக் காட்
முடியும்?

★

# வாலாஜா தோழர்களுக்கு


18, Reddiappa St., VELLORE (N. A.)

Date 25. 12. 1951.

The Secretary
Dravidian Progressive Federation
Kancheepuram.

Sir,

I support the formation of Dravidasthan and am ready to sign the pledge.

Yours sincerely
M. A. Manickavelu
Candidate
Polur Constituency

முத்தமிடவும் சித்தமாக உள்ளனரோ, அந்த இலட்சியத்தை ஏற்றுக் கொள்வதாக, மாணிக்கவேலர் உறுதிதரும் கடிதம்.

இதைக்கண்டதும் களிப்புப் பிறக்காமலிருக்க முடியுமா!

திராவிட நாடு எனும் பேச்சு, காட்டுக் கூச்சல் என்றார் காமராசர்.— இதோ, மாணிக்கவேலர், ஏற்று கொள்கிறார்.

திராவிடநாடு என்றால் இன்னதென்றே புரியவில்லை, என்று பேசினார் பக்தவத்சலம் — இதோ அதைப் புரிந்துகொண்டதுடன் ஆதரவும் தர இசைகிறார், மாணிக்கவேலர். அவர் சட்டசபை சென்று அமருவது நமது இலட்சியத்துக்கு உரம் ஊட்டும், நமது இயக்கத்துக்கு மதிப்பளிக்கும். நமது கிளர்ச்சிக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்று எண்ணுமலிருக்கமுடியுமா — தெளிவாகத் தெரிவிக்கிறாரே, திராவிடநாடு அமைவதை நான் ஆதரிக்கிறேன் என்று.

இதுதான் மாணிக்கவேலர் ...ப்பிவைத்த ஆங்கிலக்கடிதம்— ...ளை ஆனந்தத்திலாழ்த்திய கடி... — தி. மு. க. தோழர்களை ...ணிக்கவேலருக்காகப் பரிவுடன் ...யாற்றத் தூண்டிய கடிதம் எத்... 'பட்டபட்டே' காங்கிரஸ் தலை...கள் திராவிடநாடு பிரச்சினையை ...ட்சியம் செய்தாலும், எதிர்த்...லும், ஏளனம் செய்தாலும், ...லையில்லை, கருத்திலே தெளிவும் ...ியமாற்றும் திறனும், கஷ்டப்...ம் சமூகத்திடம் தொடர்பும் ...ண்ட தலைவர்கள் திராவிட நாடு ...ச்சினையை ஆதரிக்கிறார்கள்

எனவே வெற்றிக்கு வாய்ப்பு இருக்கிறது என்ற களிப்பையும் நம்பிக்கையையும் நமக்கெல்லாம் தந்த கடிதம். — மாணிக்கவேலர், திராவிடநாடு அமைவதை ஆதரிப்பதாக எழுதியுள்ள கடிதம்—நமது இதயகீதத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடும் கடிதம்—எந்த இலட்சியத்தை நாம் மக்கள் மன்றத்திலே எடுத்துரைத்து வந்திருக்கிறோமோ — எந்த இலட்சியத்துக்காக எண்ணற்ற இளைஞர்கள் சிறைச்சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எனக்கூறி ஏற்றுக்கொள்ளவும், தேவைப்பட்டால் தூக்குக் கயிறை

எனவேதான் பூரிப்படைந்தோம். அந்தப் பூரிப்பைப் பொசுக்கித் தள்ளிவிட்டுப் புன்னகை புரிகிறார் பூசுரத்தலைவர்.

இரட்டைச் சந்தோஷமல்லவா அவருக்கு.

மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி காட்டப்படுகிறது — திராவிட இனத்தவருக்குக் காட்டப்படுகிறது—காங்கிரசை முறியடித்தவருக்குக் காட்டப்படுகிறது—நமது இனத்தாருக்கு அல்ல—என்பது பெருமகிழ்ச்சி ஊட்டத்தான் செய்யும் ஆச்சாரியாருக்கு!

மாணிக்கவேலர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரை ஏசிப் பேசுகிறார், சீறித் தாக்குகிறார் — இதுவும் பெருமகிழ்ச்சி அவருக்கு!

சிங்கங்கள் மோதிக்கொள்ளும் போது சிறு நரி இரத்தம் குடித்து இன்பம் பெறுமாமே காடுகளில்— அதுபோல, நாட்டிலே இது.

காட்டட்டும்! காட்டட்டும்!!— என்று கூறிக்களிக்கிறார் தன் அந்தரங்க நண்பர்களிடம்!

தாக்கட்டும், தாக்கட்டும்—உறவு அற்றுப் போகட்டும்—என்று பேசி மகிழ்கிறார், தன் குழுவினருடன்!

அவருக்கு இதுபோன்ற சம்பவங்கள் இரட்டைச் சந்தோஷம் அளிக்கத்தான் செய்யும்.

இது நமக்கு நன்றாகப் புரிகிற போதுதான், மாணிக்கவேலரின் போக்கால் மூண்ட கோபத்துடன், இந்தப் போக்கு மூலம் ஆச்சாரியார் பெறும் ஆனந்தத்தை எண்ணி ஏக்கம்—ஏக்கமா!—வேதனை மூண்டு விடுகிறது. என்செய்வது—திராவிட முன்னேற்றக் கழகம் தன் வலிவை மேலும் பக்குவப்படுத்தியாகவேண்டும்—ஆம் — தி. மு. கழகம் நண்பர்களை நாடித்தேடிப் பெறலாம், ஆனால் நயவஞ்சகத்தைத் திறமை மிக்க கலையாக்கிக் கொண்டுள்ள ஆச்சாரியாரின் பிடியிலே நாடு சிக்கிக் கொண்டதால், நாம் பெறும் நண்பர்களை நம்மிடமிருந்து பிரித்து விடவும், பகையை மூட்டிவிடவுமான காரியம், பலப்பல நடைபெறத்தான் செய்யும் — எனவே இந்தச் சம்பவங்கள் மூலம நாம் பெறவேண்டிய பாடம, தி. மு. க. ன் வலிவு, நிச்சயமாக, வளர்ந்தாகவேண்டும்—வளரச் செய்வோம் என்று வாலிபத் தோழர்கள் சூளுரைக்கவேண்டும்.

ஆச்சாரியார் ஆட்சிபீடம் ஏறியது முதல், இத்தனைய திருத்தங்களைக் கொண்டு வருகிறார் — திறம்படப் புரிகிறார்— திறமை எப்படி இராமற்போகும்— அவர்தான் இராமாயணத்தைப் பாராயணம் செய்கிறவராயிற்றே, வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்குப் பட்டம் சூட்டிய காண்டம், சில திருத்தங்களுடன் அரசியலில் இப்போது வெளியிடப் படுகிறது.

இறுதியில் இந்தப் போக்கு, ஆச்சாரியாரையும் அவருடைய ஆதீனத்துக்கு வந்து சேர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியையும், எமகே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பது, அரசியல் வரலாறுகளிலே ஆராய்ச்சியுள்ளவர்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது. துவக்கமோ, அவருக்கும் அவருடைய துதிபாடகர்களுக்கும் களிப்பூட்டத்தான் செய்யும். மாணிக்கவேலர் மந்திரி வேலையை ஏற்றுக்கொண்டதும், ஆச்சாரியார் ஆனந்தமாக அல்லவா ஊஞ்சலாடி இருப்பார்.

அதைவிட ஆனந்தம் பிறந்திருக்கும், மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி பிடித்த செய்தி கேட்டு!

அதனினும் அதிகமான மகிழ்ச்சி பிறந்திருக்கும், மாணிக்கவேலர் சீற்றமுற்று, நம்மைத் தாக்கிப் பேசுகிறார் என்று கேள்விப்படும்போது.

ஆகவே, களிப்பை மேலும் மேலும் பெற, மற்றும் பல, மாணிக்கவேலர்களைத் தேடிக் கொண்டுதானிருப்பார்—தன் சீடகோடிகளிடமும், இந்தத் திருமந்திரத்தைத்தான் உபதேசித்தபடி இருப்பார்.

இந்தச் சூழ்நிலையைத்தான், நாம் தகர்த்தெறிந்தாகவேண்டும்.

ஆச்சாரியாருடைய ஆட்சியின் அடிப்படையே, 'மித்ர பேதம்' என்பதிலேதான் இருக்கிறது!

எனவே, மாணிக்க வேலர்களுக்குக் கருப்புக்கொடி காட்டி விடுவதுடன் நமதுபணி தீர்ந்துபோகவில்லை சிக்கலும் தீர்ந்து போகவில்லை, இத்தகைய சூழ்ச்சி முறை மூலம், நாடாளலாம் என்று மனப்பால் குடிக்கும் ஆச்சாரியாரின் சூது அம்பலமாகவேண்டும — அவருடைய பிடியிலிருந்து நாடு விடுபட்டாக வேண்டும்—அதற்கான அறப்போர் உருவாகவேண்டும்—அதிலே ஆயிரமாயிரம் வீர ஆளைஞர்கள் குதித்தாகவேண்டும் — வீரமும் தியாக சுபாவமும், கொள்கைப் பற்றும் கொண்டவர்களை எல்லாம் கொன்று குவிக்கட்டும் ; துல்லுப் பட்டர்—அந்தப் பிணங்களைத் தமது சூதுத் தோட்டத்துக்கு உரமாக்கி, சூழ்ச்சி மலர் பூத்ததும், எடுத்து மணம் பார்த்து மகிழட்டும் — ஜாரபோல! சியாங்கெஷேக்போல! பிரஞ்சு நாட்டு லூயிபோல!

அறப்போருக்கான வலிவைப் பெறுவதிலே, தி. மு. க. தோழர்கள் முனைந்திருக்க வேண்டும்.

தி. மு. க. வின் வளர் மாணிக்கவேலரின் உதவியா கூட்டுறவாலோ ஏற்பட்டதல் இதனை யாவரும் அறிவர்.

தேர்தலின்போது ஏற்பட்ட வுக்கு முன்பு, அவரிடமிரு தி. மு. க. துரும்பளவு உதவி பெற்றதில்லை, தூசிபோன்ற ஆ வும் பெற்றதில்லை!

தேர்தலின்போது நாம் தே பட்டோம்.

தேர்தலின்போது நமக்கு அ தேவைப்பட்டார், காங்கிரசை யடிக்க.

தேர்தல் முடிந்தது — காங் முறியடிக்கப் பட்டது..

இப்போது அவர் வேறு 'தி செல்கிறார்!

அதை அவருடைய நண்பர் 'சுபதிசை' என்கிறார்கள், அர யூரமறிந்தவர்கள் 'சனிதிசை' கிறார்கள். எது எப்படியாயிலு அவர் செல்லும் 'திசை' தவற பதை அந்தத் 'திருக்கு'த் திரும் வருக்குக் கருப்புக் கொடி மூ வாலாஜாவில் அன்று காட்டிவி கள்—தி. மு. க. வின் கருத் என்ன அவர் 'கனம்' ஆனதுப என்று பலரும் கேட்டுக்கொ ருந்த கேள்விக்கு அன்று ப ளித்து விட்டார்கள்—நாம், அ போக்கைக் கண்டிக்கிறோம் பதை நாடு அறிந்து கொண்டு டது.

வாலாஜாவிலேயே மாணிக்கவே ரும் பதிலளித்திருக்கிறார் நம அன்றையச் சம்பவம் அவருக் சோமூட்டியதால் காரசார நம்மைத் தாக்கினார்—சகஜந்தா நான் அதுபற்றிக் கவலைப்படவில்

அவருக்கும் தி. மு. கழகத் கும் நேசப்பான்மையோ நெருங் தொடர்போ முன்பு கிடையா எனவே அவர் அன்று கருப் கொடி காட்டியதைத் தப்பா செய்து கொண்டு பேசியிருக்கிற ஏசவும் செய்தார்.

மாணிக்கவேலர் மந்திரியான மூலம் மக்களுடைய வெறுப் ஆளான காங்கிரஸ் கட்சிக் காங்கிரஸ் மந்திரி சபைக்கும் வு தேடித்தருகிறார் — இத தான் நாம் அவரைக்கண்டிக்கிறோ கருப்புக் கொடி காட்டுகிறோம்.

தி. மு. க. தோழர்கள் ம மல்ல, அவருக்கு 'ஓட்' அளி

ளெல்லாம் கூட காங்கிரஸ் ஆட்சி மீண்டும் ஏற்பட்டு விடக் கூடாது, என்பதற்காகத்தான், ஓட் டளித்தனர்!

எனவே, காரணம் ஆயிரம் காட்டினாலும், அவர் இன்று, காங்கிரஸ் மந்திரிசபை அமைவதற்குத் துணை நின்று, ஆச்சாரியாருக்குத்துதிபாடிக் கொண்டிருப்பதைக் கண்டு, வேதனைப் படாமலிருக்க முடியாது.

காங்கிரஸ் மந்திரிசபையாக இருந்தாலென்ன, மாணிக்கவேலருக்கு அதிலே ஒரு இடம் கிடைத்து விட்டது, அந்த வரையிலே இலாபந்தான், அது வரையிலே சந்தோஷந்தான், என்று எண்ணுபவர்கள், பலர் இருக்கலாம், அவர்களின் மூளைகை, வேக வேகமாகக் குறைத்துத்தான் செய்யும் காங்கிரசுக்கு எதிர்ப்புணர்ச்சி காட்டும் அறிகுறியாக,மாணிக்கவேலருக்கு ஓட் அளித்தவர்கள், அவர் மந்திரியாகி விட்டார் என்பதற்காக மகிழமாட்டார்கள் — இப்படி இவர் செய்வது சரி யானால், இவர் காங்கிரஸ் பேராலேயே தேர்தலுக்கு நின்றிருக்கலாமே, ஏன் நம்மை எல்லாம் காங்கிரஸ் அபேட்சகருக்கு 'ஓட்' தராதீர்கள், மீண்டும் காங்கிரசாட்சி ஏற்பட விட்டு விடாதீர்கள் என்று கூறி கூப்பிட்டுவிட்டு,இப்போது, அதே காங்கிரசாட்சியிலே இவர் பங்கு பெற்றுக்கொண்டார், என்று எண்ணுவர்.

நம்மவர் மந்திரியானரே!—என்று ஆனந்தம் கொண்டாடி மகிழ்ந்து பேசுபவர்கள்கூட, அவர் மந்திரி யாக்கப்பட்டதால், ஒரு பலனும் ஏற்படவில்லை, என்பதை உணரத் தலைப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

எப்படியோ ஒன்று நம்மவர் மந்திரியாகி விட்டார், எனவே நம்மவர் களின் குறைகளைப் போக்குவார், என்று இன்று நம்பிக்கொண்டு, அவரை நாவார (மனமார அல்ல) வாழ்த்துபவர்கள்கூட, நாளாவட்டத்திலே, ஆச்சாரியார் மந்திரிசபையில் இருந்துகொண்டு மாணிக்கவேலரால் நம்மவர்களுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது என்பதை உணரத்தான் போகிறார்கள்.

துவக்கத்திலே அவர்களுக்கு இலேசான சபலம் தட்டத்தான் செய்யும்.

காகிதப்பூ, கண்ணுக்கு மட்டும் தான் கவர்ச்சி—மணம்கிடைக்காது.

அது போலவேதான், ஆச்சாரியார் மந்திரிசபையிலே வீற்றிருப்பதும்.

ஆச்சாரியாரும் ஆள் தேடும் படலம், அணைத்து அழிக்கும் படலம், என்பவைகளுக்குப் பிறகு, உதறித் தள்ளும் படலத்தைத்தான் துவக்குவார்! அப்போதுதான், இன்று ஆயாசப்படும் நண்பர்கள் கூட, வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டப்பட்டதன் கருத்தைப் பாராட்டுவர்!

பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் நலனைப்பேண, மந்திரியானர்வேறு ஒன்றுமில்லை—என்று தழதழத்தகுரலில் பேசும் நண்பர்களுக்கு, மிகப் பழய அல்ல.சமீபகாலத்திலே நடைபெற்ற ஒரு அரசியல் சம்பவத்தை நினைவூட்டுகிறேன்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தின் நலனைக் காக்கும் வாய்ப்பு இது என்று கூறிக்கொண்டுதான், டாக்டர் அம்பேத்கார், நேரு சர்க்காரிலே மந்திரி வேலை பார்த்துவந்தார்.

அந்தோ! அம்பேத்கார் இப்படி நேருவின் வலையிலே வீழலாமா, என்று அவருடைய உண்மையான நண்பர்கள் கூறியபோதுகூட அவருடைய ஆதரவாளர்கள், பொறு, பொறு! பார், பார்! தாழ்த்தப்பட்டோருக்கு அம்பேத்கார் என்னென்ன நன்மைகள் செய்யப்போகிறார் பார்! என்று நல்வாக்குக் கொடுத்தனர்.

நடைபெற்றதோ,நாடுஅறிந்ததே!

மனம் நொந்து மனதைத்திறந்து பேசியபடி டாக்டர் அம்பேத்கார் நேரு சர்க்காரிலிருந்து விலகினர்.

விலகும்போது கூறினர், நான் மந்திரிகளிலே ஒருவனாக இருந்தேனே தவிர, மந்திரிசபையின் வேலைத்திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள்தான் தயாரித்தனர், எனவே தாழ்த்தப்பட்டோருக்கு ஏதும் நலன் கிடைக்கவழி இல்லாமல் போய்விட்டது — என்னிடம் கலந்துபேசுவதோ,பொறுப்புகளைத் தருவதோகூட இல்லை — எனவே என்னல் என் சமூகத்தினருக்கு நன்மை செய்ய இயலாமல் போய் விட்டது. எனவே நான் நேரு சர்க்காரில் மந்திரியாக இனி இரேன் என்று கூறிவிட்டு வந்தார்!

டாக்டர் அம்பேத்கார், தாழ்த்தப்பட்டோருக்கு நன்மை செய்வதற்காகத்தான் பதவியிலமர்ந்தார் —ஆனல் அவரால் முடியவில்லை — அதற்கு நேரு சர்க்கார் இடமளிக்கவில்லை. மனம் நொந்து இந்த உண்மையை அவர் வெளியிட்டபிறகும், பிற்பட்ட சமூகத்தினரின் நலனுக்காகப்பாடுபடத்தான் பதவி ஏற்றேன், என்று மாணிக்கவேலர் கூறினல், பொருள் உண்டா!

இதை எண்ணிடும்போது, மாணிக்கவேலரின்போக்கு பிற்பட்ட சமூகத்துக்கு நலனளிக்கும் என்று எப்படி உறுதி பிறக்கமுடியும். எனவேதான் மாணிக்க வேலரின் போக்கைக் கண்டித்துக் கருப்புக் கொடி காட்டப்பட்டது.

அவரோ, "ஆஹா! நான் யார்? நீங்கள் யார்? நான் யாருடன் சேர்ந்தால் உங்களுக்கு என்ன? என்னைக் கட்டுப்படுத்த உங்களுக்கு என்னஉரிமை? நானே பொதுநலக் கட்சியின் தலைவர்! நீங்களோ, தி. மு க.! என்னை இது செய்யாதே அது செய்யாதே என்று கூற நீங்கள் யார்?"' என்றுகேட்கிறர்.

அவர் வேறு நாம் வேறு, என்பதால்தான், அவர் ஆச்சாரியாருடன் கூடிக்கொள்ள முடிந்தது—தி.மு.க. வாகவோ, உண்மையில் தி. மு. கழகத்தினிடம் பற்றும் பாசமும் கொண்டவராகவோ இருந்தால்இந்த நிலைமை ஏற்பட்டே இராது.

அவர் பொதுநலக் கட்சியின் தலைவர்.

பொதுநலத்துக்குக் காங்கிரசாட்சி ஊறு செய்தது.

எனவேதான் காங்கிரசைத் தேர்தலிலே மக்கள் முறியடித்தனர்.

பொதுநலக் கட்சியும், காங்கிரசாட்சி கூடாது என்று மக்களிடம் கூறித்தான் ஓட் பெற்றது.

இன்று பொதுநலக் கட்சியின் தலைவர், பொதுநலத்துக்கு ஊறு செய்வதும், மக்களால் வெறுத்துத் தள்ளப்பட்டதுமான காங்கிரஸ் கட்சி, 'ஜனநாயக தர்மத்தின்'படி ஆளும்நிலை பெறமுடியாத அளவுக்குத் தேய்ந்திருக்கும்போது, அதற்கு 'டானிக்' கொடுப்பது போல, உதவி செய்து மந்திரிசபையிலே இருக்க இசைவது,எந்தவகையான நியாயம், என்று மக்கள் கேட்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 11—5—52 [ஞாயிறு

# நரி பரியாகும் படலம்!

★

கவர்னரே! சட்டசபையிலே சொற்பொழிவாற்றும் தகுதி உமக்குக் கிடையாது!!

முதியவர் ஒருவர் முழக்கமிடுகிறார் இதுபோல, சட்டசபையில்—கவர்னர் முன்னாலே—ஆச்சாரியார் வீற்றிருக்கும் மன்றத்திலே.

கவர்னர் சொற்பொழிவாற்றுவதைக் கண்டிக்கும் அறிகுறியாக நாங்கள் இந்தச் சபையை விட்டு வெளியேறுகிறோம், என்று வீர உரை கூறிவிட்டு, 170 சட்டசபை உறுப்பினர்கள் வெளியேறினர்!

மைனாரிடி மந்திரிசபை ஒழிக! மக்கள் துரோகிகள் ஒழிக! என்று முழக்கமிட்டனர், சட்டசபை நடவடிக்கைகளைக் காணச்சென்றிருந்தவர்கள். கருப்புக்கொடியும் காட்டினர். போலீஸ் புகுந்தது புயலை அடக்க — புரட்சிப் பொறிகளை சட்டசபைக் கட்டடத்துக்கு வெளியே கொண்டு சென்றது — அங்கே இருந்த பொதுமக்கள் இதைக்கண்டனர்—ஆர்வத்தீ மூண்டது — கண்டன முழக்கம் கிளம்பிற்று!

போலீசும் இராணுவமும், தடியும் துப்பாக்கியும், சட்டசபைக் கட்டடத்தைச் சுற்றிலும், அதை ஒட்டிஉள்ள பலதெருக்களிலும்.

நாடாள வந்துள்ளார் ஆச்சாரியார் — துவக்கவிழா நடைபெறுகிறது, துப்பாக்கியும் துரோகிகளும் துணைபுரிய, துதிபாடுவோர் உடனிருக்க, பொதுமக்கள் கண்டிக்க, வீரர் முழக்கமிட, போலீஸ் புயலை அடக்க, எனும் இத்தகைய கோலாகலத்துடன்.

கண்டனம், வெளி ஏற்றம், முழக்கம், கருப்புக்கொடி! சட்டசபைக்கு உள்ளே!!

பட்டாளம், போலீஸ் வெளியே!!

எவ்வளவு நேர்த்தியான ஆரம்பம்! எவ்வளவு கீர்த்தி பெறுகிறார்கள், துவக்கத்திலேயே.

கவர்னர் பேச எழுகிறார் — உமக்கு அந்தத்தகுதி இல்லை என்று முழக்கம் கிளம்புகிறது — எதர்கட்சி அபிமானிகளிடமிருந்து அல்ல — காங்கிரசில் ஆண்டு பல உழைத்து இன்று அதன் சூதை அம்பலமாக்கும் ஆந்திரத் தலைவர் பிரகாசத்திடமிருந்து.

பூ! இதனாலே என்ன! கவர்னரின் சம்பளத்திலே கால்காசு குறையவா செய்யும்—அவருடைய திரு உருவத்தைத் தாங்காமலா போகும் ஏடுகள், அவருக்கு என்ன குறை வந்து விடும் இதனால், என்பர், காங்கிரசார்:— அதிலும் — காங்கிரசாரிலே அரசியல் தெளிவு அதிகமற்றவர்கள்.

ஆனால், சென்னையின் வரலாற்றிலே, இச்சம்பவம் இடம் பெறுகிறது. கவர்னர் சட்ட சபையைத் துவக்குகிறார், கருப்புக்கொடி பறக்கிறது, செந்தலைப் பூச்சிகள் என்று எந்தப் போலீசாரைக் காங்கிரசார் கேலிபேசி வந்தனரோ, அவர்களின் துணையோடு, துரைத்தனத்தின் துவக்கநாள் தொடங்குகிறது.

காங்கிரசாட்சிக்கு இனி ஏற்படப் போகும் கதிக்கு இதுமுன் அறிவிப்பு!

துவக்கமே இதுபோல! தொடர்ந்து நடைபெற உள்ளவை யாவை!! இறுதி எங்ஙனம் இருக்கும், வரலாறு அறிந்த எவரும், யூகித்துக்கொள்ளலாம்.

நாடாள வந்துள்ளார் அரசியல் ஞானி!

அவர் ஆளவருகிறார் என்ற சேதி கேட்டதும், பட்ட மரம் துளிர்க்கிறது, கெட்ட நிலை மாறுகிறது, என்று இலட்சோப இலட்சம் மக்கள் பஜனை செய்தனராம்!

அத்தகைய ஆட்சியின் துவக்க நாளில், பொதுமக்களின் பூரிப்பு, எவ்விதம் இருந்தது. வெட்கம்! வெட்கம்!!

வேதங்களை வேதியர் முழங்க, சுமங்கலிகள் ஆர்த்தி எடுக்க, சீடர்கள் சாமரம் வீச, அர்ச்சகர்கள் தூபம் காட்ட, ஆட்சிப் பெருமான் கெம்பீரமாக வந்தமர்ந்தாரா!—இல்லை, இல்லை — நிற்காதே, போகாதே, பார்க்காதே, பேசாதே என்று பொது-மக்களைப் போலீஸ் விரட்ட, இந்தச்சபையிலே பேச இவருக்கு என்ன தகுதி என்று கவர்னரைப் பிரகாசம் கேட்க, பார்வையாளர்களிலே சிலபலர், ஒ ஆச்சாரியார் ஆட்சி என்று முழ மிட, வெளியே இழுத்துச் செ என்று போலீசுக்கு அதிகா உத்திரவிட, அதற்கு முன் இ காணீர், என்று அவர்கள் கரு கொடியைக் காட்ட, அன்பர் சாரியார் தலைகுனிந்த வண் அமர்ந்திருக்க, இதென்ன வ இப்படியா துவக்கவிழா!! என் கவலைப்பட்டுக் கவர்னர், ச சபைத் தலைவரைப் பார்க்க, இ என்ன பிரமாதம், போகப் பே நடைபெறுவதைப் பாரும், எ கூறுவதுபோல ஐக்ய ஜனநா முன்னணியினர் கவர்னரை நோ இதுபோல காட்சி இருந்தது

ஆயுதப் போலீசும் படை ரும் முன்னும் பின்னும் இரு ம கிலும் வர, உல்லாசச் சீமான்க ஒய்யாரச் சீமாட்டிகளும் கண் களிப்பதற்காக அமைந்திருந்த கக் கொட்டகைக்குள் ஜார் நு தான்—கண்டதும் கண்டனம் கி பிற்று, ஏழைஎளியவர்களிடமிரு —எதிர்ப்பும் பிறந்தது, பயங் மான வேகத்தில் வளர்ந்தது, திகிலடைந்தான்—ஜாரின் நிலைக அவனது பாதுகாவலர் பீதிகொ டனர்—தடியும்துப்பாக்கியும் து புரிந்தன—ஜார் தப்பினான்—எனி புரட்சிப் புயல் வேகம அடித்தது—வளர்ந்தது.

இது ரஷியாவில் — சொ கோலனை மக்கள் எதிர்க் துணிந்ததும்!

இங்கு, சட்ட சபையிலே க னர் பேசுகிறார்—பேசாதே எ முழக்கம்!!

சரிதம் எவ்வளவு அழகாக, பு புதிய பதிப்புகளாக வெளி வரு றது!!

இவ்வளவு 'இடி'களுக்கிடை யிலே, காங்கிரசாருக்கு, ஒ திருப்தி! பயங்கரமான கிணற்றி விழ இருந்தவன், வேரொன்றை பற்றிக்கொண்டு, உயிர் தப்பி முயல, வேர் அறுந்துகொண் வர, கீழே தெரியும் ஆபத்த அவன் மனம் பீதி கொள்ள, அந் சமயத்திலே, அங்கிருந்த தே அடையிலிருந்து சிந்திய தேன்த அவன் வாயில்பட, அதை சுவைத்து இன்புற்றானமே—க படித்திருப்பீர்கள் — அதுபோ இவ்வளவு அலங்கோலமான

பத்துக்கிடையே, அவர்களுக்கு ஒரு அற்ப சந்தோஷம்—ஐக்யமுன்னணி தோற்றுவிட்டதாம்—சட்டசபைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலிலே, ஐக்ய ஜனநாயக் முன்னணி தோற்றுவிட்டதாம்!

சாயம் வெளுத்துவிட்டது-கட்டு குலைந்துவிட்டது—கனவு பொய்த்துவிட்டது—என்று கொட்டை எழுத்துக்களிலே அச்சடித்துப் பார்த்து அகமகிழ்கிறார்கள் 'அற்ப சந்தோஷிகள்' — வரலாறோ, அழிக்க முடியாத முறையிலே தீட்டுகிறது, ஆச்சாரியார் சட்டசபையைக்கூட்டினார்—கவர்னர் பேசவந்தார்—கண்டனம் கிளம்பிற்று, கருப்புக்கொடி பறந்தது — சட்டசபையைச் சுற்றிலும் பட்டாளம் பாதுகாப்பளித்தது—இவ்விதமான அலங்கோலத்துடன் துவக்கநாள் இருந்தது— என்று. எனினும், அவர்களோ, மலக் குழியிலிருந்து மல்லிகையை எடுத்து முகர்ந்திடும் மந்த மதியினர்போல, மகிழ்கிறார்கள்—தாங்கள் வெற்றி பெற்றோம் என்று கூறி அல்ல—ஐக்ய முன்னணி தோற்றது என்று கூறி.

ஐக்ய ஜனநாயக முன்னணியை கவர்னர் முதலிலேயே, பணியாற்ற இடமளிக்காமல், நொண்டிக்குத் தடி தானம் தருவதுபோல, ஆளும் இலாபக்கைப் பெறாத காங்கிரசுக்கு ஆச்சாரியாரை அளித்து காங்கிரஸ் மைனாரிடியைப் பீடத்தில் அமர்த்தினார். மாணிக்கவேலர் கிடைத்தார். பிரகாசம் பேசுவதைக் கேளுங்கள்—"ஆச்சாரியார் பதினைந்து மந்திரிகளை நியமித்து, அவர்களை அமிழ்த்துவிட, அவர்கள் சென்று ஆதரவு தேடி, சட்டசபைத் தேர்தலிலே ஐக்கிய முன்னணி வெற்றி பெறவொட்டாதபடி செய்தனர்.'

இதற்குப் பெயர் வெற்றியா!

காங்கிரசுக்கு, காங்கிரஸ் கட்சியின் போரால், சட்டசபைத் தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்கு, ஆட்களை நிறுத்தி வைக்க, யோக்யத்தையும் துணிவும், நம்பிக்கையும் இல்லையே! ஐக்ய முன்னணிக்குத் தானே அந்த யோக்யதை இருந்தது! மாராமரத்தின் பின்புறம் இருந்தல்லவா, காங்கிரஸ் போரிட்டது—நேருக்கு நேர்—ஆண்மையுடன்—அரசியல் நேர்மையுடனா!

அலிபுரம் சிறையில் அவதிப்பட்டு அன்னை பாரததேவியின் தளைகளை அறுத்தெறிய அரும்பாடுபட்ட காங்கிரஸ் தலைவர்களா, வெற்றி பெற்றார்கள். அவர்கள் 'மலைமலை'யாக வீற்றிருந்தனர்—வெட்கம் தாங்கியநிலையில்-வெற்றிபெற்றவர்களோ சுயேச்சைகள்!

அவர்களுக்கு என்ன கசக்குமா, காங்கிரஸ் கட்சி தரும் சர்க்கரைக் கட்டி!!

காங்கிரஸ் லேபில் கூட ஒட்டிக்கொள்ள மறுத்தனர் — வெட்கம், மானம் ரோஷமற்று, பரவாயில்லை, சுயேச்சையாகவே இருந்தாலும் பரவாயில்லை, சிகப்பு நிறம் படாததாக இருந்தால் போதும் என்று தானே, காங்கிரஸ் கட்சியினர், சிவ சண்முகம், பக்தவச்சலம் ஆகியோர் பின்னாலே, வால் பிடித்துக் கொண்டு ஓடினர்! கீர்த்தியும் கித்தாப்பும் உள்ள காரியமா இது!!

ஐக்ய முன்னணி, அரசியல் இலஞ்சங்களை அள்ளி வீசும் ஆச்சாரியாரின் முழுத்திறமைக்குப் பிறகும் பெற்ற ஓட்டுகள், சாமான்யமல்ல, ஐக்யமுன்னணியின் கட்டு உடைபடும் விதமானது அல்ல! அதிலே இருப்பதைவிட, சும்மா இருந்தால், காங்கிரஸ் அரசியல் சூதாடிகள், சாமரம் வீசுவார்கள் என்றுதெரிந்ததால், சிலர், 'பக்தவத்சல' அவதாரமாயினர் — அவர்களுக்குப் பாதந் தாங்கும் காரியம் புரிந்தனர், பாரத மாதாவின் பரிவுக்குப் பாத்திரமான திருக்குமாரர்கள்! இது, பாராட்டுதலுக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய காரியமா!! தெளிவுள்ளோர் சிந்திக்க வேண்டும்.

துவக்கநாளும், சட்டசபைத்தலைவர், துணைத்தலைவர் தேர்தலும், காங்கிரஸ் கட்சியின் போக்கு எவ்வளவு வேகமாகக் கேவல நிலைக்கு ஆச்சாரியாரால் இழுத்துச் செல்லப்படுகிறது என்பதை விளக்கும் நாள் ஆகிவிட்டது. இதை உணராத பேனா ஓட்டிகளும் பெரிய நாவினரும், ஐ. மு. சாயம் வெளுத்தது என்று கூறுவதிலே, பொருள் என்ன இருக்கிறது என்று கேட்கிறோம்.

நரியைப் பரியாக்கும் படலமும். பிறகு பரி நரியாகி உண்மைப் பரிகளைக் கடித்து விட்டு, ஊளையிட்டபடி ஓடியபடலமும் திருவிளையாடற் புராணமாகும். அரசியலிலே, இப்போது காங்கிரஸ் மைனாரிடி மெஜாராடியாக்கப்படுவது நரி பரியான படலம் தான்! கபவஞ்சகத்தின் துவக்கம், வெற்றிகரமாக இருந்தது! ஆனால், இறுதி? அதை 375 பேர் கொண்ட சபை அல்ல. அந்தச் சபைகளை ஆக்கவும் அழிக்கவும் உரிமையும் வல்லமையும் கொண்ட மக்கள், தீர்மானிக்க இருக்கிறார்கள்! மக்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்!! இதை ஆச்சாரியார் திருச்சபை உணரட்டும்.

---

வடார்க்காடு மாவட்ட

## தி. மு. க. கிளைகளுக்கு

மாணிக்கவேலர், ஆச்சாரியார் மந்திரிசபையிலே சேர்ந்து கொண்டதைக் கண்டிக்கும் குறியாக, தி. மு. க. வாலாஜாவில கருப்புக் கொடி காட்டியதை அறிவீர்கள்.

தி. மு கழகத்தின் கருத்தை வாலாஜா எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த கருப்புக் கொடி பிடிக்கும் காரியத்தை தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும், பல ஊர்களிலேயும் நடத்த வேண்டுமென்றும், கடிதங்கள் பல வந்துள்ளன.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்களாக தேர்தலிலே நின்று வெற்றி பெற்றவர்களிலே பலரை, ஆச்சாரியாரின் சாகசம் [illegible] கொண்டுவிட்டது.

மைனாரிடி மெஜாரிடியாக மாற்றிக் காட்டப் பட்டிருக்கிறது.

எனவே, பொதுவாகவே, ஆச்சாரியார் மந்திரிசபையை தி. மு. கழகம் எந்த முறையிலே எதிர்ப்பது, என்பதைக் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டி இருக்கிறது.

எனவே இதற்கு இடையில், வடார்க்காடு மாவட்டத்தினர் என்ன செய்வது என்பதை முடிவு செய்யவும், ஆச்சாரியார் மந்திரி சபையை எதிர்த்துப் பொது நடவடிக்கையில் ஈடுபட யோசிக்கவும், அனைவரையும் கலந்தாலோசிக்க இருக்கிறேன். ஆகவே வடார்க்காடு மாவட்ட தி. மு கிளைகள், தலைமை நிலைய அனுமதியின்றி, தனித் தனியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம், என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

**அண்ணாதுரை.**

5-ம் பக்கத் தொடர்ச்சி

கிறார்கள். கேட்கமாட்டார்களா? தி. மு. கழகத்தினர் கேட்கின்றனர்—கேட்பதா குற்றம்—ஓடி ஆடி அவர் புகழ்பாடி, ஓட்டுங்கள் மாட்டை, என்று முழக்கமிட்டு, மாணிக்கவேலர்களுக்கு வேலை செய்யமட்டும் தான் தி. மு. கழகமோ!

நான் யார்—இவர்கள் யார்!!

எவ்வளவு சுலபமாகக் கூறிவிட்டார்!

தேர்தலின்போது 'நாமெல்லாம் ஒன்று'—அந்த உறவு, பந்தம், பாசம், இப்போது, இல்லை!!

ஆச்சாரியார், யார்? இவர்யார்?

இவர்களுக்குள்ளே என்ன தொடர்பு?

தேர்தலின் போது இவருக்கும் ஆச்சாரியாருக்கும் என்ன தொடர்பு? ஒன்றும் கிடையாது! இப்போது? ஆச்சாரியார் அரசியல் ஞானியாகத் தென்படுகிறார் இவர் கண்களுக்கு! பாசமும் நேசமும் வழிந்து ஓடுகிறது! கனிவு கசிந்து வருகிறது. உருகுகிறார், ஆச்சாரியாரின் அருங்குணங்களைக் கூறிக் கூறி! மாணிக்கவேலருக்காக ஓட்டு தேடித்தர நாம்—பிறகோ நான் யார்? இவர்கள் யார்?—என்றபேச்சு!!

இந்தப் பேச்சு கேட்டு, தி.மு.க. தோழர்கள் கோபப்பட்டுப் பயன் இல்லை—கழகத்தை எஃகுக் கோட்டையாக்கும் ஆர்வத்தைப் பெற்றாக வேண்டும் இது போன்ற சம்பவங்கள் இனியும் நேரிடாதிருக்க வேண்டுமானல்.

இந்த நிலைமையால் தி.மு கழகத்துக்கு ஏதும் நஷ்டமில்லை—மாணிக்கவேலர், தமது உண்மையான நண்பர்களை இழக்கிறார்—அரசியல் பட்டுப் பூச்சிகளைக் கண்டுகளிக்கிறார்—தாராளமாகச் செய்யட்டும்.

தி. மு. க.,மாணிக்கவேலர்களின் கூட்டுறவின்றித்தான், வளர்ந்தது—மாணிக்கவேலர்கள், நாடிவரும் அளவுக்கு வளர்ச்சி கிடைத்தது, தி மு. கழகத்துக்கு.

இன்று வரையில், தி. மு. கழகம், தேர்தலின்போது யாராருக்கு ஆதரவு அளித்து அரும்பாடுபட்டதோ அவர்களிடமிருந்து எந்தவகையான உதவியையும் பெற்று வளரவில்லை. தி. மு. கழகம் வளர்ந்தது, வீர இளைஞர்களின் உழைப்பால், இலட்சியவாதிகளின் பணியினால்,வளர்ந்த கழகத்தின் உதவி தேவையாக இருந்தது மாணிக்கவேலர்களுக்கு, நமக்கும் காங்கிரசைத் தேர்தல் களத்திலே முறியடிக்க அவர்கள் தேவைப்பட்டார்கள் — அவ்வளவுதான்! எனவே, மாணிக்கவேலர் மார்ம்பலத்தாரிடம் தன்னை ஒப்படைத்து விட்டதால், தி. மு. கழகத்துக்கு ஏதும் நஷ்டம் இல்லை! எனினும், அவருடைய செயலை, தி. மு. கழகம் கண்டிக்கிறது, பொது மக்கள் வெறுக்கிறார்கள், என்பதை எடுத்துக் காட்டவேண்டிய பொறுப்புணர்ச்சியினால் வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டப்பட்டது—பொச்சரிப்பால் அல்ல!!

எந்த நோக்கத்தோடு பாடுபட்டோமோ, அந்த நோக்கம் பாழாகும் வண்ணம் மாணிக்கவேலர் நடந்து கொண்டாரே. என்பதால் ஏற்படும் வேதனையையும், எவ்வளவு தந்திரமாகவும் சுலபமாகவும், ஆச்சாரியார் தனக்குப் புதிய வலிவு தேடிக்கொண்டார், என்பதையும் எண்ணும்போது எழும் கோபமும் தான் கருப்புக்கொடி காட்டியதற்குக் காரணமே தவிர, நமக்கு வரவேண்டிய மந்திரி வேலையை மாணிக்கவேலர் தட்டிப்பறித்துக் கொண்டார் என்ற காரணத்தாலா கருப்புக் கொடி காட்டினார்கள்!

பொதுமக்களிடமும், குறிப்பாக பாட்டாளிச் சமூகத்திடமும் மாணிக்கவேலருக்கு உள்ளதொடர்பையும் செல்வாக்கையும் அழித்து, தேர்தலின்போது அவர் காங்கிரசை எதிர்த்ததற்கு அவர்மீது பழி தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றஆழ்ந்த சதித்திட்டமிட்டே ஆச்சாரியார், மாணிக்கவேலரை மந்திரியாக்கினார், என்றுநிச்சயமாகக்கூறவிரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தாருக்குப் பரிந்துதான். ஆச்சாரியார் மாணிக்கவேலருக்குப் பதவி தந்தாரா? அல்லது ஆட்டம்கொடுக்கும் நிலையிலே அமைக்கப்பட்டுள்ள தன்மந்திரிசபைக்கு ஆதரவு தேடிக் கொள்ள, வேலை தந்தாரா? என்பதை எண்ணிப்பார்க்கும் எவருக்குத்தான், ஆச்சாரியாரின் சூழ்ச்சி புரியாமலிருக்கமுடியும்.

சூழ்ச்சியினால் தவிர வேறு எப்படி 152 பேர்கொண்ட ஒரு கட்சி, மந்திரிசபை அமைத்த, விழாமல் பாதுகாக்கமுடியும்? ஆச்சாரியாரின் சூழ்ச்சியின் ஆரம்பம், மாணிக்கவேலர் படலம். இந்த சோகக்கதை தொடர்ந்து எழுதப்படுகிறது. ஆனால் கடைசி அத்தியாயத்தை மக்கள் எழுதப் போகிறார்கள். இது நிச்சயம்!!

மாணிக்கவேலர் சேர்ந்துவிட்டார் என்று கூறி மற்றும் சிலரையும் இழுத்துக்கொள்ள முடிந்தது ஆச்சாரியாரால்! ஆனால் இந்த 'வித்தை' மூலமாகவே, மந்திரிசபையைக் காப்பாற்றிக்கொண்டிருக்கமுடியாது என்பது அவருக்கே தெரியும்—தெரிந்துதான். அவரே கூறினார், நமக்கு ஆபத்து எப்போதும் இருந்தபடி இருக்கும் என்று! இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க, 'அல்பாயுசு' மந்திரி சபையிலேயா மாணிக்கவேலர் வீற்றிருக்க இசைவது? அதில் இருந்துகொண்டு என்ன காரியம் சாதிக்க முடியும்? என்று மக்கள் கேட்பதிலே தவறு என்ன?

நான் என் தொகுதியிலேசென்று கலந்துபேசி சம்மதம் பெற்றுத்தான் இந்தமுடிவுக்கு வந்தேன்—என்று மாணிக்கவேலர் கூறுகிறார்.

எந்தப்பத்திரிகையிலும் இந்தச் 'சேதி' காணப்படவில்லை.

மாணிக்கவேலருக்கு,நான் ஒன்று கூறவிரும்புகிறேன். காங்கிரஸ் எதிர்ப்பாளர்களின் ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற்றீர். காங்கிரசை முறியடிப்பதுதன் பொது நலத்துக்கு உகந்தது என்றீர். காங்கிரஸ் அபேட்சகரை மக்கள் முறியடித்தார்கள்! செட்டிநாட்டு அரசருக்குவிட்டுக் கொடுத்ததுபோலக் கூட காங்கிரஸ் தங்களுக்குப் போட்டி போடாமலில்லை!

தங்கள் வெற்றி நாட்டுக்குக் கேடு என்று காங்கிரஸ் பிரசாரம் செய்தது.

காங்கிரஸ் வெற்றி பெற்றால் நாடும்-நாசமாகும் பிற்பட்ட வகுப்புக்கும் கேடு விளையும் என்று கூறினீர்.

மக்கள் உமது பேச்சை ஏற்றுக் கொண்டனர்—வாகை சூடினீர்—தி மு கழகத்தின் உதவியுடன்.

தி. மு. கழகத்தைக்கூட மறந்து விடுங்கள்—'ஓட்' அளித்தார்களே, மக்கள், அவர்களிடம் தாங்கள் தங்கள் நிலையை விளக்கிப்பேசுங்கள்; தங்கள்போக்கு சரியல்ல, என்று

கருதுபவர்களும் பேசட்டும், தங்கள் தொகுதியில்— அமைதியானமுறையிலே இந்தக்கூட்டங்களை நடத்துவோம் தங்கள் தொகுதியில்: இதற்கு 'ஓட்' எடுத்துப் பார்ப்போம் — சம்மதமா?

அறை கூவி அழைக்கிறேன் என்று கோபிக்க வேண்டாம். அரசியல் உலகிலே ஒரு நல்ல முறை ஏற்படட்டும் என்ற ஆசை மிகுதியினால் கூறுகிறேன்.

மறு தேர்தலுக்கு நின்று பாருங்கள் என்று கூடக் கூறவில்லை. ஆச்சாரியார் மந்திரி சபையிலே சேரத்தான் வேண்டும் என்று தாங்கள் கூறி, ஆச்சாரியார் மந்திரி சபையிலே சேரக்கூடாது என்று நாங்கள் கூறி இருதரப்புப்பேச்சையும்கேட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்—ஏற்றுக் கொள்கிறீரா, என்று கேட்கிறேன்.

இந்த முறையைக் கையாளாமல, காங்கிரசை முறியடித்த தாங்கள் காங்கிரஸ் கட்சி அமைத்த மந்திரி சபையிலே, இடம் பெற்றதாலேதான், துரோகம் செய்து விட்டார் மாணிக்கவேலர் என்று மக்கள்கூறுகிறார்கள்.

அதைத்தான் தி. மு. கழகம் எடுத்துரைக்கிறது—தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்து விட்டார் என்று அல்ல!

ஏன் இதைக் கூறுகிறேன். என்றால், மாணிக்கவேலா, வாலாஜாவில் நான் தி. மு. கழகத்துக்கு ஒரு துரோகமும் செய்யவில்லை, என்று கூறுகிறார்.

வேலூரில், காமன்வீல் காரியாலயத்தினர் மாணிக்கவேலரின் வாலாஜா சொற்பொழிவை வெளியிட்டுள்ளனர்.

போளூர் தொகுதியில் காமன் வீல் கட்சியின் சார்பாக சென்னை சட்டசபைத் தேர்தலில் நின்றேன். அப்பொழுது சில தோழர்கள் 'திராவிடநாடு' பிரிவினைத் தீர்மானம் சட்டசபை விவாதத்திற்கு வரும் பொழுது அத்தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்குமாறு கடிதம் கேட்டார்கள். அதற்கு இணங்கி, திராவிடநாடு பிரிவினைத் தீர்மானம் சென்னை சட்டசபையில் விவாதத்திற்குக் கோண்டுவாப்படுமானல அதை ஆதரிப்பதாக எழுதிக் கொடுத்தேன். அந்தத் தீர்மானம்

திற்கு வரவில்லை. வந்தபிறகு அத்தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்றால் அப்போழுதுதான் அவர்களுக்கு நான் எழுதிக் கொடுத்தபடிச் செய்யவில்லை என்றும் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன் என்றும் கூறிக் கொள்ள நியாயம் உண்டு. அதற்கு முன்னால் அவர்கள் இப்படி எல்லாம் ஆர்ப்பாட்டம் செய்வது சரியா என்று பொதுமக்கள் யோசித்துத் தீர்ப்புக் கூறவேண்டும்'' என்று கூறியிருக்கிறார்.

தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்ததாக அல்ல, ஓட்டளித்த மக்களுக்குத் துரோகம் செய்ததற்காகத்தான் கருப்புக்கொடி காட்டப்பட்டது. மக்கள் அவ்விதம் எண்ணவில்லை, நான் அவர்களுக்குத் துரோகம் செய்யவில்லை, என்று மாணிக்கவேலர் கூறுகிறார் இதிலே எந்தக்கருத்து சரி என்று அறிய, ஒரேவழி மக்களிடம் இருதரப்பினரும் இது விஷயமாகப் பேசி, காரணங்களை விளக்கிக் காட்டியானபிறகு, மக்கள் கூறும் முடிவைத் தெரிந்துகொள்வது தான். எனவேதான், அவருடைய தொகுதியிலே, இந்த முறையைக் கையாளச் சம்மதமா என்று கேட்கிறேன்.

மாணிக்கவேலர் தி. மு. கழகத் தவராக இருந்தால், அவரை தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்துவிட்டார் என்று கூற இயலும்—இப்போது நிலை அது அல்ல. இப்போது, தி. மு. கழகம் கூறுவது, மாணிக்கவேலர், மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார் என்பது தான்.

தி. மு. கழகம், மட்டுமல்ல இதைக் கூறுவது

திராவிடர்கழகமும் இதைக் கூறுகிறது.

கம்யூனிஸ்டு கட்சியும், பிரஜா கட்சியும் இதைக் கூறுகின்றன.

இந்தக் கட்சிகளெல்லாம் எனக்கு எம்மாத்திரம் என்று மாணிக்கவேலர் பேசக்கூடும், அது அவருடைய இஷ்டம்! ஆனல் ஒன்றுமட்டும் அவர் அறிந்து கொள்ளவேண்டும், இவரை மக்கள் ஆதரித்ததுபோலவே, கம்யூனிஸ்டுகளையும் பிரஜா கட்சியையும் மக்கள்

ரவு பெற்று வெற்றி பெற்ற மாணிக்கவேலரின் கட்சியைவிட, இவை இரண்டும், அளவிலே மிகமிகப் பெரியன—ஏறத்தாழ 100-உறுப்பினர்கள் அவர்கள் சட்டசபையில்—அறுவர் எம்மவர் என்கிறார் மாணிக்கவேலர்!

காங்கிரசை ஆளவிடக்கூடாது என்பதற்காக பல இலட்சம் மக்கள் 'ஓட்' அளித்தனர்—மாணிக்கவேலரும் இதே முறையிலேதான் ஓட் பெற்றார்—அவர்கள் காங்கிரஸ் மந்திரிசபையை ஆதரிக்கவில்லை—இவர் அதிலே இடமே பெற்றார்—இதை எண்ணும் போது, இவர் தொகுதி மக்கள் இருக்கட்டும், பொதுவாக நாடு பூராவிலும் உள்ள பொது மக்கள், இவரைப்பற்றி என்ன எண்ணுவார்கள்? என்ன எண்ணுகிறார்கள் என்பதைக் கூறவா வேண்டும்!

நான், தி. மு. கழகத்துக்கு என்ன துரோகம் செய்துவிட்டேன் என்று கேட்கிறார்—தி. மு. க. கூறுகிறது, ஐயா! தாங்கள், மக்களுக்குத் துரோகம் செய்தீர் என்று.

தி. மு. கழகத்துக்கும் தமக்கும், ஏற்பட்ட தேர்தல் உறவை, மாணிக்க வேலர் விளக்கியிருப்பது கண்டு மகிழ்கிறேன். அதிலே சில சிறிய திருத்தங்களையும் கூறிக் கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை படியுங்கள் நான் குறிப்பிட்டிருக்கும் அவருடைய வாலாஜா சொற்பொழிவை.

திராவிடநாடு பிரிவினைத்தீர்மானம் சென்னை சட்டசபையிலே விவாதத்திற்குக் கோண்டுவரப்படுமானல் அதை ஆதரிப்பதாக எழுதிக்கொடுத்தேன். என்று பேசுகிறார்.

அவருடைய ஆங்கிலக்கடிதத்தை வெளியிட்டிருக்கிறேன்-பாருங்கள்.

நான் திராவிடஸ்தான் அமைவதை ஆதரிக்கிறேன்.

இதுதான் அவருடைய வாசகக் கருத்து.

சட்டசபையிலே தீர்மானம் கொண்டுவரப்படுமானல் நான் ஆதரிக்கிறேன் என்று அல்ல; இரத்னச் சுருக்கமாகக் கூறுகிறார்,

I support the formation of Dravidasthan.

திராவிடஸ்தான் அமைவதைத்தான்

சட்டசபையிலே அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுமேயானால் நான் அதை ஆதரிக்கிறேன், என்றுதானே நான் எழுதிக்கொடுத்தேன், இப்போது அந்தத் தீர்மானம் வரவில்லையே—அந்தத் தீர்மானம் வந்து அப்போது நான் ஆதரிக்காவிட்டால்தானே என்னைத் துரோகி என்று கூறலாம்—என்று கேட்கிறார். சரியா இந்த வாதம்!! திறமையான வாதம்—ஒப்புக்கொள்ள்கிறேன் —. ஆனால் நியாயமான வாதமா?

திராவிடநாடு அமைப்பை நான் ஆதரிக்கிறேன், என்று கடிதம் தெரிவிக்கிறது. தீர்மானத்தைச் சட்டசபையிலே கொண்டுவந்தால் ஆதரிக்கிறேன், என்று அல்ல.

திராவிடநாடு அமைப்பை நான் ஆதரிக்கிறேன், என்றால், அதற்காவனசெய்தல், மக்களிடம் அது பற்றி எடுத்துரைத்தல், அதை மறுப்போர்க்கு மறுப்பளித்தல், அதுபற்றிச் சட்டசபையிலும் ஆதரவு காட்டுவது—எனும் இவ்வளவும் அடங்கியதுதானே!

முடியுமா இப்போது இவரால் திராவிடநாடு தேவைதான், நான் அதை ஆதரிக்கிறேன் என்றுபேச. விடுவாரா ஆச்சாரியார்!

எங்கே ஒரு தடவை பரீட்சை செய்து பார்க்கட்டும் மாணிக்கவேலர்!!

திராவிடநாடு அமைவதை நான் ஆதரிக்கிறேன் என்று உறுதிகூறியவர் மாணிக்கவேலர்.

திராவிடநாடு என்பது பித்தர் திட்டம் என்ற கொள்கை கொண்டவர், ஆச்சாரியார்.

ஆச்சாரியார் 'பாரதவர்ஷம்' 'பஜகோவிந்தம்!'

அவருடைய மந்திரி சபையிலே திராவிடநாடு அமைப்பை ஆதரிக்கும் மாணிக்கவேலர்.

பொருத்தம் இருக்கிறதா!!

திராவிடநாடு அமைவதை ஆதரிப்பவர் திராவிடநாடு அமைவதை எதிர்ப்பவரான ஆச்சாரியாருடன் எப்படி கூட்டாகப் பணியாற்றலாம்!

மாணிக்கவேலர் திராவிட நாடு ஆதரவாளர் —அதை இப்போதும் மறுக்காததற்காக என் நன்றி, மகிழ்ச்சி—ஆனால் ஆச்சாரியாரோ. திராவிடநாடு எதிர்ப்பாளர்—எங்ஙனம் திராவிடநாடு அமைவதை மாணிக்கவேலர் ஆதரிக்க முடியும் ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்துகொண்டு! விளக்கம்தேவை!!

காங்கிரஸ் கட்சி, திராவிட நாடு அமைவதை எதிர்ப்பது. இன்று ஆட்சியைஎப்படியாவது கைப்பற்றியாக வேண்டும் என்ற நிலைக்குக்காரணமே, காங்கிரசாட்சி அமையாவிட்டால், திராவிடநாடு பிரச்சினை திடீர் பலம் பெற்றுவிடும் என்ற பயம்தான். இதையறியாரா மாணிக்கவேலர்! வெண்ணெய் உருண்டையைச்சுண்ணும்பு போடப்பட்டுள்ள சட்டியிலே தான் வைத்திருக்கிறேன், என்று பேசுவதா!

திராவிடநாடு ஆதரவாளர்,பாரதநாடு பாதுகாவலரின்கட்சி நடத்தும் மந்திரிசபையில்! விந்தையான நிலைமை! விசித்திரமான வாதம்!!

ஏதோ வாதத்துக்காகவாவது அன்பர் திராவிடநாடு அமைவதை நான் எதிர்க்கவில்லையே, அந்தத்தீர்மானம் வந்தால் நான் ஆதரிக்காவிட்டால், அப்போதுதானே நீங்கள் என்னைத் துரோகி என்று சொல்ல நியாயம் உண்டு, என்று பேசுவதன்மூலம், திராவிட நாடு பிரச்சினையை ஆதரிப்பதாகக், கூறுகிறாரே, அதுவரையிலே மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சி தரும் பேச்சை அவரிடமிருந்து பெற்றுத்தந்ததும், நீங்கள் காட்டிய கருப்புக்கொடிதான் எனவே அதற்காக உங்களுக்கு, என் நன்றி.

அன்பன்,

**அண்ணாதுரை.**

## இலங்கையில்
# அறப்போர்

இலங்கையில் நடைபெற்றுவரும் அறப்போர் பற்றி தி. மு. கழகத்தின் ஆகரவுக்கட்டுரையும் இலங்கை தி. மு. க.வின் கருத்துரையும் அடுத்த இதழில் வெளிவருகிறது.

11-ம் பக்கத் தொடர்ச்சி

தனமான வானவெளிக்கப்பல்களும் நடமாடக்கூடுமென்றும் இவர் சுட்டிக்காட்டுகிறார்.

வானிலையையும், வானசாஸ்திர நுணுக்கங்களையும் ஆராய்வதற்காக உலகிலேயே மிக உயரமான இடத்தில் இந்தியா ஒரு ஆய்வு நிலையம் அமைக்க திட்டமிட்டிருக்கிறது. இந்த நிலையம் மத்திய இமயமலையிலுள்ள பத்ரிநாத்—மன்னா கணவாயில் அமைக்கப்படும், 17000 அடி உயரத்தில் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக இந்திய விஞ்ஞானிகளைக்கொண்ட ஒரு குழு, மே மாதம் இங்கு செல்லவிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள ராக்கி மலையைச்சேர்ந்த பைக்ஸ் சிகரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஆய்வு நிலையம்தான் இன்று உலகிலேயே மிக உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது 1,6000 அடி உயரத்திலிருக்கிறது. இந்த நிலையம் கொலாரேடோவிலிருக்கிறது. இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் நிலையம் இதைவிட 1000 அடி உயரமாக இருக்கும்.

விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கவுன்சிலைச் சேர்ந்த ஒரு கமிட்டியிடம் இந்தப் புதிய நிலையத்தின் தயாரிப்புத் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. 17000, அடி உயரத்தில் ஒரு வானமண்டல ஆராய்ச்சி கோபுரமும், 12,000 அடி உயரத்தில் விஞ்ஞானிகளின் வாசஸ்தலங்களும் அமைக்கப்படும். இந்த காலனியில் நூல் நிலையமும், ஆய்வுச்சாலையும், தொழில் நிலையங்களும்,ஜாகைகளும் மின்சார நிலையமும் காஸ்மிக் கிரணங்கள் அதன் சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்வதற்கான சாதனங்களும் அமைக்கப்படும்.

பனிப் படலங்கள், பனிமலைகள், வானமண்டல வஸ்துக்கள், சூரியக் காட்சிகள், வான பௌதிக விவரங்கள் முதலியவை இந்த நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்படும். ரேடியேஷன் சம்பந்தமான ஆராய்ச்சிகளும் இங்கு நடைபெறும். இதனால்வான சாஸ்திரிகள், பிரகிருதி விஞ்ஞானிகள், வானிலை ஆராய்ச்சியாளர்கள், பூதத்துவ சாஸ்திரிகள், கிருமிசாஸ்திரிகள் ஆகியோருக்கு பல அனுகூலங்கள் ஏற்படும்.

# ★ வான வெளி ★

[வானத்தை நோக்குகிறார்கள், மக்கள் மழையில்லையே என்று வாடுகிறார்கள், ஆனால் ஆச்சாரியார், வானத்தை நோக்கினால் மட்டும் போதுமா, வணங்குங்கள், வருண தேவன் அருள் பாலிப்பார் என்று உபதேசம் புரிகிறார். 'பஜகோவிந்தம்' பாணியிலேயே, பரிபாலனம் நடத்த முற்படுகிறார்.

வானத்தை, அவர் தேவலோகம் என்று பாமரரிடம் கூறுகிறார். அவர் ஆளவந்திருக்கும் மந்திரி — ஆனாலும் பஜனைகோவில் குரலிலேயே பேசுகிறார்!

உலகில்வானவெளிக்குயாத்திரை செய்யலாமா என்று சிந்தனையாளர்கள் ஆராய்ந்த வண்ணமுள்ளனர். அந்த வெளிக்குச் செல்ல, வானவெளிக் கப்பல் செய்ய முடியுமா என்று முயற்சிசெய்கின்றனர். அந்த முயற்சியிலே ஈடுபட்டு உழைக்கும் விதத்தை விஞ்ஞான விற்பன்னார்கள் விளக்குகிறார்கள்.

வானவெளிக்கே, மனிதன்செல்லலாம் என்று மக்கள் முயற்சியெடுக்கும் காலத்தில், வானத்தைநோக்கி இறைஞ்சுங்கள் என்கிறார் — மதபோதகர் அல்ல, மார்க்கபிரசாரகர் அல்ல, சித்தரல்ல, ஜீயரல்ல, மந்திரி ஆச்சாரியார்!

உலகிலேயே மிக உயரமான இடத்திலே, வானிலை ஆய்வுசெய்ய, ஒரு கூடம் அமைக்க இந்தியா முன்வந்திருக்கிறது. ஆனாலும், ஆச்சாரியார் வானத்தை வாழ்த்தி, மழைவரம் பெறச் சொல்கிறார்!

கீழேயுள்ள கட்டுரையைப்படியுங்கள் வானவெளிபற்றி விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆ—ர்.]

கிரகங்களுக்கிடையே இருக்கும் வானவெளிக்கு யாத்திரை செய்வதுபற்றி இப்போது தீவிர, ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும திறமை சான்றவராக விளங்கும் ஐந்து விஞ்ஞானிகள் 'காலியர்ன் வீக்லி' என்ற பத்திரிகையின் மார்ச் 13-தேதி இதழில் இதைப்பற்றி தொடர்ச்சியாக எழுதியிருக்கின்றனர்.

சட்டங்களில் தேர்ச்சி பெற்றிருக்கும் ஒரு நிபுணர் இந்த யாத்திரைகளால் ஏற்படும் நுணுக்கங்களை விவரித்திருக்கிறார்.

இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் வானவெளிக் கப்பலொன்று (செயற்கை கிரகம்) இயங்குமென்று ஜெர்மன் அறிஞராகிய டாக்டர் வேர்னர் வான் பிரான் கூறுகிறார். மணிக்கு 3000 மைல வேகத்திற்குமேல் சென்று இங்கிலாந்தை அழித்த வி—2 ரக ராக்கெட் குண்டுகளைக்கண்டுபிடித்தவர் இவர்தான். வான்பிரான் அலபாமாவைச் சேர்ந்த ஹன்ட்ஸ்வில் என்ற இடத்தில் தற்போதுஇருந்து வருகிறார். இங்குள்ள ரெட்ஸ்டோன் ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்தவரும் 100 ஜெர்மன் விஞ்ஞானிகளில் இவரும் ஒருவர். ராக்கெட் குண்டுகள் செய்யும் பிரிவுக்கு இவர் டைரெக்டராக இருந்து வருகிறார்.

வான வெளியில் கிரகத்திற்கு இடையே அமையும் இந்தசெயற்கை கிரகம் பூமியை ஒரு சிறிய சந்திரனைப்போல சுற்றி வருமென்றும், இத்தகைய சாதனத்தை அமைக்கும் முதல் நாடுதான் இராணுவ பலத்தில் முதன்மையாக விளங்குமென்றும் இவர் கூறுகிறார்.

இந்தப் பந்தயத்தில் ருஷியாவும் தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறதென்றும், அமெரிக்கா இதில் துரிதமாக முன்னேறிவிடும் வாய்ப்பிலிருக்கிறதென்றும் முதலாவது ராக்கெட் விமானம் அமைப்பதற்கு 50 லட்சம் டாலர் செலவழியுமென்றும், ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய சகல செலவுகளும் இதில் அடங்குமென்றும் இவர் கூறுகிறார்.

இதற்கான சக்தி அமெரிக்காவிடம இருப்பதால் அணுசக்திக்காக காத்திருக்கத் தேவையில்லையென்றும் கூறப்படுகிறது.

முதல் ராக்கெட் மூன்று கூறுகளாக இருக்கும். உந்துவதற்காக உபயோகிக்கப்படும் இரண்டு கூறுகள் கடலில் விழுந்துவிடும். இவற்றை எடுத்து மீண்டும் உபயோகிக்கலாம். அசல் ராக்கெட் வானில் 1075 மைல் தூரத்தில் போய் நிற்கும். வான்பிரான் இதைப்பற்றிய விளக்கங்களையும், புள்ளிகளையும், படங்களையும் தனது கட்டுரையில் கொடுத்திருக்கிறார். வானவெளி ஆராய்ச்சியாளர்களின் விளக்கங்களை சரியாகத் தெரிந்துகொள்ளாததால்தான் பொதுமக்கள் இதை கற்பிதமென்று கருதுகின்றனர்.

ஹார்வார்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானசாஸ்திர இலாகாவில் தலைவராகஇருக்கும் டாக்டர் பிரேட் எல். விப்பிள், வான மண்டலசந்திர கிரக கப்பல்களில் வான சாஸ்திரிகள் என்ன செய்வார்களென்பதை குறித்து விளக்கம் தந்துள்ளார்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த பூதபௌதிக கழகத்தில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் ஜோஸப் கப்ளான் வாயுமண்டலத்தின்மேல் பகுதியை விவரித்து 100 மைலுக்குமேல் வானவெளியில் பாதை அமைகிறதென கூறுகிறார். நமது ராக்கெட்டுகள் இந்த தூரத்திற்கு மேல் போயிருக்கின்றன.

டெக்ஸாஸைச் சேர்ந்த ராண்டோல்ப் பீல்டில் அமெரிக்க விமானப் படை வைத்திய பள்ளிக்கூடத்தில், வானமண்டல வைத்திய ஆராய்ச்சி இலாகாவின் அதிபராக இருக்கும் டாக்டர் ஹெயின்ஸ்ஹேபர், ஆகர்ஷண சக்தி இல்லாத பகுதிக்கு நாம் செல்லும்போது ஏற்படும் குணம்சங்களை விவரிக்கிறார். மனிதர்கள் இத்தன்மைகளை சமாளிக்கமுடியும் என்றும் இவர் கூறுகிறார்.

வில்லிலே என்பவர் முதல் உபகிரகத்தின் அமைப்பு விவரங்களைத் தருகிறார். ஜெர்மன் ராக்கெட் விமான ஆராய்ச்சியாளர்களில்நீண்டகால அனுபவம் பெற்றிருக்கும் இவர் இப்பொழுது எழுத்தாளராக மாறியிருக்கிறார்.

ஐக்கிய நாட்டுசபை சட்ட இலாகாவின் உதவி டைரெக்டராகிய ஆஸ்கார் ஷார்டர் இதரகிரகங்களில் கண்டுபிடிக்கபடும் இடங்களையும், உலோக சேமிப்புகளையும், யார் வைத்திருப்பார்கள் என்பதை விவரிக்கிறார். சில வருடங்களுக்கு முன்னர், டெலிவிஷன் எழுத்தாளர்கள் கண்டுபிடித்ததுபோன்ற திருட்டுத்

(10-ம் பக்கம் பார்க்க)

# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

"தென் ஆற்காடு மாவட்டத்தில், தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பாகப் பணியாற்றிய வீர இளைஞர் மஜீத் எனும் தோழன் காங்கிரசுக்காரர் ஒருவரால் கொலை செய்யப்பட்ட செய்தி தாங்கள் அறிந்ததே.

தமிழ்நாடெங்கும் இந்தப் படுகொலையைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்தும், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அனுதாபச் செய்தி அனுப்பியும் எல்லா முற்போக்குக் கழகங்களும், தங்கள் கடமையைச்செய்தன.

தென்ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த (உழைப்பாளர் கட்சி) M. L. A-க்களுக்கும் இது விஷயமாகத் தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

தோழர் மஜீதின் குடும்பத்தினர் பரம ஏழைகள்.

பொதுநலப பணிக்காகத் தன் மகன் பலியிடப்பட்ட செய்தி ஒருபுறமும், வறுமை மற்றோர்புறமும் தாக்க, மஜீதின் தந்தை தத்தளிப்பதாக அறிகிறேன்.

எனவே, "மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி" முயற்சியில், திராவிடமுன்னேற்றக் கழகத் தோழர்கள் ஈடுபட்டு, உருவாக்கி, விரைவில், வெற்றி தேடித்தரக் கோருகிறேன்.

இந்த என் வேண்டுகோளை அன்புடன் ஆதரித்து விரைவில், என் எண்ணம் வெற்றி பெறச் செய்வீர்கள் என நம்புகிறேன்." என்று தி. மு. க. பொதுச்செயலாளர் சி.என்.ஏ. அறிக்கைவெளியிட்டதை யொட்டி தோழர்கள், இலட்சியத்திற்காகப் போராடி உயிர் நீத்த, பெருவீரன் மஜீத்தின் குடும்பத்தின் நல்வாழ்விற்காக நிதியளித்தபடியுள்ளனர். முன்னர் வெளியிட்டுள்ளதற்குமேல், இப்பொழுது நிதியளித்துள்ளவர்கள் விவரம் கீழே தரப்படுகிறது.

| | |
|---|---|
| முன்வரவு | 118—14—0 |
| மு. கருணாநிதி, கண்ணதாசன் | 75—0—0 |
| உசிலம்பட்டி தி. மு. க. சார்பில் | 1—1—0 |
| அய்யம்பாளையம் மகாராஜன் மூலம் | 18—7—0 |
| ஆவடி பி. கே. எஸ், வைசரா | 4—0—0 |
| தாசம்பட்டி சின்னப்பன் | 0—8—0 |
| ஏனங்குடி முத்துராமன் | 10—0—0 |
| தூத்துக்குடி கோபால்ராஜன் | 1—0—0 |
| நாகர்கோவில் ஈ பி. ரத்தினம் | 0—4—0 |
| திருமங்கலம் தனுக்கோடி | 0—8 - 0 |
| சைதாப்பேட்டை எத்திராஜ் | 1—0—0 |
| சென்னை டி. கிருஷ்ணன் மூலம் | 9—0—0 |
| **காரைக்குடி** | |
| இராம. சுப்பையா | 4—0—0 |
| தாவூதுபாட்சா | 2—0—0 |
| சுப. சிவஞானம் | 2—0—0 |
| சேகர் | 2—0—0 |
| க. வே. சத்தியவான் | 2—0—0 |
| குழந்தையன் | 3—0—0 |
| சோ. வெ. சோலையன் | 2—0—0 |

| | |
|---|---|
| அ. கா. அ. பிரதர்ஸ் | 2—0—0 |
| கதி. இராசன் | 2—0—0 |
| கரு. வள்ளியப்பன் | 2—0—0 |
| வீரப்பன் | 4—0—0 |
| சிவநேசபாண்டியன் | 2—0—0 |
| நடராஜன் ஜி. ராமசாமி | 2—0—0 |
| சு. ம. சாலியர் | 2—0—0 |
| என். கோபாலன் | 2—0—0 |
| ஒரு தோழர் | 2—0—0 |
| எ. இராமனுதன் | 2—0—0 |
| ஒரு தோழர் | 5—0—0 |
| டி. நாகராஜன் | 2—0—0 |
| கே. வி. முஸ்தபா | 1—0—0 |
| மு. கா. மதினாமளிகை | 1—0—0 |
| நா. முத்து | 1—0—0 |
| எம். எஸ். அன்வார் | 0—1—0 |
| ஆர். ராமகிருஷ்ணன் | 0—4—0 |
| ப. சி. செல்லையா | 0—8—0 |
| எ. ஆர். சின்னக்காளை | 0—8—0 |
| கே. ஆர். ராமச்சந்திரன் | 0—4—0 |
| டி. ஆர். கணேசன் | 0—4—0 |
| கே. எம். மஸ்தான் | 0—4—0 |
| கோவிந்தசாமி | 0—4—0 |
| சி. சுப்பிரமணியம் | 0—4—0 |
| பி. கோவிந்தசாமி | 0—2—0 |
| இ. ராமச்சந்திரன் | 0—2—0 |
| எஸ். சண்முகநாதன் | 0—2—0 |
| அழகிரி | 0—2—0 |
| நாராயணசாமி | 0—2—0 |
| நாச்சியார் ஸ்டோர்ஸ் | 0 - 2—0 |
| ராமசாமி | 0—2—0 |
| என். எ. ஆர். | 0—4—0 |
| கே. வெள்ளச்சாமி | 0—2—0 |
| எம். முகம்மது ஈசுபு | 0—4—0 |
| சேக்முகம்மது | 0—4—0 |
| பா. ஆசிம் | 0—2—0 |
| மு. முத்தையா | 0—4—0 |
| சே. சாகுல்அமீது | 0—2—0 |
| பி. மாரிமுத்து | 0—2—0 |
| ஜான் | 0—4—0 |
| காஞ்சிபுரம் பொதுக் கூட்டத்தில் | 13—15—4 |
| சேலம் ராபாஸ்கரன் மூலம் | 7—11—0 |
| கருவலூர் அங்கப்பன் | 0—12—0 |
| | 316—3—[illegible] |

மேலும் நிதி யனுப்புவோர், 'மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி' என்று குறிப்பிட்டு காஞ்சிபுரம் 'திராவிடநாடு' முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.